ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

08.01.2026

1. ஆறுமுகப் பெருமான் வழிகாட்ட
அளவிலா ஞானிகள் படைகளும்
வருகை புரிந்து கலியுகம் தன்னை
வழிநடத்த வேண்டி அரங்கனென்

2. அரங்கனென் பிரணவக் குடிலில்
ஆற்றலாக இறங்கி அருள
அரங்கனென் தருமம் கண்டு
ஆற்றலாக்கி அருளமுதுமாக்கி

3. ஆக்கியே வரங்கள் தந்தருள
அதன் பெருமை கூறி இனிதே
தேக்கமின்றி விசுவாவசு சிலை திங்கள்
தக்க கடை குருவார அருளாசிதனை

4. தன்னையே அரங்கமகான் யானும்
தரணியோர் பயனுற உரைப்பேன்
அன்னதானமே பிரதான சேவை
அடுத்தவர் பசிபிணி விரட்டும்

5. விரட்டும் தயவு கொண்டவர்க்கே
வினை அறுக்கும் வல்லமையுண்டு
மிரட்டும் கலித் துன்பங்களை
மண்ணுலகில் அகற்றி வாழ்வில்

6. வாழ்வில் அமைதி பாதுகாப்பு பெற
வரங்களாக அன்னதான சேவை
தாழ்விலா தொடர வேண்டும்
தவராஜன் யான் வகுத்தநல்

7. வகுத்தநல் அன்னதான சேவையை
வழிமொழிந்து என் பீடம் வந்து
தகுந்த பொருளுதவி செய்துமே
தானவர்கள் கரத்தால் தருமமிட்டு

8. தருமமிட்டு சக்தி பெருக்கி
தவசி என் அனுமதி ஆசி ஏற்று
வறுமை இன்றி வாழும் காலமதில்
வளங்கள் கூடி தானதருமம்

9. தானதருமம் தயவு கூடிட
தடைபடா செய்யும் பலமும்
ஞானபலமும் தருவாய் என வேண்டி
நம்பிக்கை வைத்து சரணடைய

10. சரணடைய சகல பாதுகாப்புடன்
சர்வ காரிய சித்தியும் கூடி
அரணாய் தரும வழிகள் தனை
அளவிலா செய்து கொண்டுவர

11. வருக அரங்கன் என் பலம்
வல்லமைபட வந்தணுகியே
தருமத்தால் வேலவன் ஆசியும்
தவசிபோல் வாழ்வில் சித்தியும் காணும்
ஆறுமுக அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி